**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102052

1. District மாவட்டம் : சிவகங்கை PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு சிவகங்கை Year ஆண்டு : 2018 FIR No. மு.த.அ. எண் : 04/18 Date நாள் : 26.05.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.05.18 Date to : நாள் வரை 26.05.18

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை —

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.05.2018 Time நேரம் : 13.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL II Time நேரம் : 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2. கி.மீ தெற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகம், சிவகங்கை.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.சு.சகாய அருள் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சந்தியாகு

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 4/9/18 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் சிவகங்கை

   (f) Occupation : தொழில் பூ வியாபாரம் (g) Address : முகவரி க.எண். 88, 2/73, நடுத்தெரு, பள்ளித்தம்மம் (அ) காளையார்கோவில் வட்டம், சிவகங்கை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. லெக்கிராஸ், உதவி மாவட்ட அலுவலர், (பொ) மாவட்ட அலுவலர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சிவகங்கை. (2) திரு. முத்துமோள், தீயணைப்பாளர் (Fireman), மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகம், சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   புகார் சம்பந்தமாக முதல் நிலை விசாரணை நடத்தப்பட்டு அதன்பின் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டதால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளராகிய நான், 23.05.2018ம் தேதி 13.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ச.சகாய அருள், த/பெ.சந்தியாகு, எண்.88, 2/73, நடுத்தெரு, பள்ளித்தம்மம் (அ), காளையார்கோவில் (வ), சிவகங்கை மாவட்டம் என்பவர் சிவகங்கை லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து எழுத்து மூலமான ஒரு புகார்மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர், சகாய அருள், த/பெ.சந்தியாகு, எண்.88, 2/73, நடுத்தெரு, பள்ளித்தம்மம் (அ), காளையார்கோவில் (வ), சிவகங்கை மாவட்டம், பெறுநர், உயர்திரு. துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, அய்யா, நான் பள்ளித்தம்மத்தில் புதியதாக பட்டாசு கடை கட்டியுள்ளேன். அதற்கு பட்டாசுக் கடைக்கு உரிமம் வேண்டி 25.04.2018 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணபபித்தேன். அதன்பின்னர்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A.S. [signature] 26.5.18. [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.05.2018

Name: பெயர் ..........................
Rank: நிலை ....................No. எண் .........

26.05.18.

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.04/2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி–

சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், எனது பட்டாசு கடை கட்டியுள்ள இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு பட்டாசுக்கடை நடத்துவதற்கு உரிமம் வழங்குவது தொடர்பாக ஆய்வறிக்கை அனுப்பும்படி சிவகங்கை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் சிவகங்கை தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை மாவட்ட அலுவலர் அவர்களுக்கு 02.05.2018ம் தேதி அனுப்பிய கடிதத்தின் நகல் எனக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து எனக்கு தபால் மூலம் கிடைக்கப்பெற்றது. தபால் எனக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் 1 வாரம் கழித்து மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலகத்திலிருந்து எனக்கு போன் செய்து, அன்று மாலை எனது பட்டாசு கடையை ஆய்வு செய்ய வருவதாக தெரிவித்தார்கள். அதன்படி அன்று மாலை 5 மணியளவில் மாவட்ட அலுவலர் லோகிதாஸ் மற்றும் அவரது Driver முத்துக்குமார் ஆகிய இருவரும் எனது பட்டாசுக் கடைக்கு வந்து கடையை ஆய்வு செய்துவிட்டு சென்றார்கள். 1 வாரம் கழித்து Driver முத்துக்குமாரை செல்போனில் தொடர்புகொண்டு NOC சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் 22.05.2018 மாலை 5 மணிக்கு வருமாறு என்னிடம் தெரிவித்தார். நான் அன்றைய தினம் மாலை 5 மணியளவில் மாவட்ட தீயணைப்பு அலுவலகத்திற்கு நேரில் சென்று DFO லோகிதாஸ் அவர்களை சந்தித்தேன். அப்போது அவரது ஓட்டுநர் முத்துக்குமார் உடனிருந்தார். எனது பட்டாசு கடைக்கு NOC ரெடியாகிவிட்டதா என்று கேட்டேன். அதற்கு DFO லோகிதாஸ் என்னிடம், "மற்ற நபர்களிடம் ரூ.50,000/– வாங்குகிறோம், நீங்கள் ரூ.40,000/– தாருங்கள்" என்று கூறினார், நான் ரூ.20,000/– தருவதாக அவரிடம் கூறினேன். அதற்கு முத்துக்குமார் மற்றும் லோகிதாஸ் ஆகிய இருவரும் உங்களுக்கும் வேண்டாம் எங்களுக்கும் வேண்டாம் ரூ.30,000/– தாருங்கள் என கேட்டார்கள். 23.05.2018 மதியம் 1 மணிக்குள் தருமாறு கோரியுள்ளார்கள். இவர்கள் சட்டதிட்டங்களை மதிக்காமல் லஞ்சம் பெறுவதை குறிக்கோளாக கொண்டுள்ளார்கள். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே மாவட்ட தீயணைப்பு அலுவலர் லோகிதாஸ் மற்றும் அவரது ஓட்டுநர் முத்துக்குமார் ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், இடம்– சிவகங்கை, நாள். 23.05.2018, இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) ச.சகாய அருள், 23.05.2018.

Sir, Received this petition on 23.05.2018 at 13.30 hrs and sent it to the Director, DVAC, Chennai seeking permission to register PE in this regard.

Permission obtained from the Director, DVAC, Chennai to register PE vide PE.148/2018/FS/SG, dated 24.05.2018 and then I registered a PE in Sivagangai V&AC PE.148/2018/FS/SG.

முதல்நிலை விசாரணைக்காக எதிரி பணம் கையூட்டாக கேட்டுள்ளதை உறுதிப்படுத்த புகார்தாரர் ச.சகாய அருள் அவர்களை சிவகங்கை மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகத்திற்கு சென்று எதிரியை சந்திக்குமாறு அறிவுரை கொடுத்து அவர்களுக்கு இடையே நடைபெறும் உரையாடலை பதிவு செய்வதற்காக கா.567 கண்ணன் என்பவருடன் Voice Recorder கொடுத்து 26.05.18ம் தேதி 10.00 மணிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி புகார்தாரர் ச.சகாய அருள் சிவகங்கை மாவட்ட தீயணைப்பு அலுவலர் அலுவலகத்திற்கு சென்று, எதிரியை சந்தித்த போது இருவருக்கும் இடையே நடந்த உரையாடலை குரல் பதிவு சாதனத்தில் பதிவு செய்து 10.30 மணிக்கு லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்தனர். பதிவு செய்து வந்த உரையாடலை கேட்டதில், எதிரி மனுதாரரிடம் ரூ.30,000/– கேட்டதற்கான முகாந்திரம் இருந்தது. இந்த விபரத்தை துணை இயக்குநர், DVAC, Chennai, i/c Superintendent of Police, Southern Range, Chennai அவர்களுக்கு தகவல் தெரிவித்து, இன்று 26.05.18ம் தேதி 11.00 மணிக்கு சிவகங்கை ஊ.த.க. பிரிவு கு.எண்.4/2018 U/s 7 of PC Act 1988–ன்படி வழக்கு பதிவு செய்தேன்.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடனும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை Voice Recorder மூலம் பதிவு செய்யப்பட்டதை, கணினி மூலம் குறுந்தகட்டில் (CD) பதிவிறக்கம் செய்த CD ஒன்றை இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கையின் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

R. [signature]
26/05/18